


கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான அட்டைகளை வழங்கி பேசினார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளு மன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.



நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்துறை பணிவிளக்க முகாமினை பார்வையிட்டார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.




நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான அட்டைகளை வழங்கினார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்) உட்பட பலர் உள்ளார்கள்.



நாகர்கோவில் மாநகராட்சியின்கீழ் கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை நேற்று முன்தினம் (28.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் மரு.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் எச்.ஆர்.கௌசிக் உட்பட பலர் உள்ளார்கள்.

### பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிப்பீர்!

# எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே!

## உலக சிக்கன நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக். 30-**

**“பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக சிக்கன நாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சிக்கனத்தின் இன்றியமையாமையை அனைவருக்கும் உணர்த்திடும் நாளாக அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள், ஆண்டுதோறும் “உலக சிக்கன நாள்” எனக் கொண்டாடப்படுவதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைவதுடன் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தால், அதன்வாயிலாகக் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன், அவ்வப்போது ஏற்படும் எதிர்பாரச் செலவினங்களையும் சமாளித்திட இயலும்.

“ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை”

என்ற குறளில் வள்ளுவர் பெருந்தகை, பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும், பொருள் செலவாகும் வழி பெரிதாக இல்லையெனில், அதனால் தீங்கு இல்லை என்று சிக்கனமாக வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். சேமிப்பின் அவசியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே எடுத்துரைத்து, சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். “இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு” என்பதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைக்காக சேமிக்க வேண்டும்.

சேமிப்பே ஒருவரின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுகிறது. சேமிப்பது மட்டுமல்ல, அதைச் சரியான வீதத்தில் முதலீடு செய்வதும் முக்கியம். எனவே, உலக சிக்கன நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், மக்கள் தங்கள் சேமிப்புகளை அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதுடன், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிந்திட வேண்டுகிறேன்.

சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை திருப்பாலை. இ.எம்.ஜி. யாதவர் பெண்கள் கல்லூரியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகள் பங்குபெறும் கலை இலக்கிய போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் சோழவந்தான், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதிச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடன் உள்ளனர்.





பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
116ஆவது பிறந்த நாள்
மற்றும்
குரு பூஜை

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 10.30 மணி,
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் நினைவிடத்தில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 9.30 மணி, இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

செ.ம.தொ.இ./1239/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009